
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1320**

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

**132**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**



ஏ.ஐ. சித்திரிப்புக் காட்சி

ஓவியம் : சிகரன்

## சுயராஜ்ஜியத்தை விட, சுயமரியாதையே முக்கியமானது!

காரைக்குடியில், 'செட்டிநாட்டு முதலாவது சுயமரியாதை மாநாடு' 1931-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7, 8-ஆம் தேதிகளில் நடைபெற்றது. அங்குள்ள சந்தைப்பேட்டைப் பகுதியில் 'சமதர்ம மண்டபம்' என்ற பெயரில், பிரம்மாண்டமான கொட்டகை மாநாட்டிற்காக அமைக்கப்பட்டது. முதல் நாள் காலையில், ஆர்.கே.சண்முகம் செட்டியார் உள்ளிட்ட மாநாட்டுக்கு வருகை புரிந்த தலைவர்களை வரவேற்பதற்கு, கோட்டையூர் ரயில் நிலையத்தில் ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்.

பாண்டு வாத்தியங்கள் முழங்க, தலைவர்களுக்கு மாலையிட்டு, சிதம்பரம் என்பவரது இல்லத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர். மதிய உணவுக்குப் பிறகு, கோட்டையூரில் இருந்து காரைக்குடிக்குத் தலைவர்கள் பெரும் வரவேற்புடன் அழைத்துச்செல்லப் பட்டனர். 50 கார்கள் அணிவகுக்கப் புறப்பட்ட ஊர்வலத்தில், ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். வழிநெடுகப் பல இடங்களில் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. நாச்சியாபுரத்தில் அப்போது செயல்பட்டு வந்த, 'உண்மை விளக்க நிலைய மாணவர்கள்' சுயமரியாதை இயக்கப் பாடல்களைப் பாடியவாறே ஊர்வலத்தில் முன்னே சென்றனர். வழிநெடுக வளைவுகள் அமைக்கப் பட்டு, சுயமரியாதை இயக்கக் கருத்துகள் எழுதப்பட்டிருந்தன.

காரைக்குடி சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து மட்டுமல்லாமல் சென்னை, விருதுநகர், அருப்புக்கோட்டை, புதுக்கோட்டை, மதுரை, திருச்சி, கொழும்பு, லால்குடி, கோவை உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்தும் பலர் வருகைதந்திருந்தனர். மாநாட்டு நிகழ்வுகளைக் கவனித்து, குறிப்பெடுப்பதற்காக 'குமரன்', 'ஊழியன்', 'சுதேசமித்திரன்', 'இந்து', 'மெட்ராஸ் மெயில்', 'ஜஸ்டிஸ்', 'அசோசியேட் பிரஸ்', சண்ட மாருதம்', ஞானச்சூரியன்', குடிஅரசு', புதுவை முரசு', 'நாடார் குல மித்திரன்', 'தனவணிகன்' உள்ளிட்ட பத்திரிகைகளில் இருந்து நிருபர்களும் ஆசிரியர்களும் பெரும்படையாக வந்திருந்தனர். மேடைக்கு அருகிலேயே அவர்களுக்கும் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. பெண்களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

பந்தலுக்குள் மூவாயிரம் பேர் அமர்ந்து, வெளியிலும் பலர் நின்றுகொண்டு மாநாட்டு நிகழ்வுகளைக் கவனித்தனர். மேடையில், டி.எம்.நாயர், சர் பிட்டி தியாகராயர், பெரியார் ஆகியோரின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. பந்தல் முழுவதும் மலர்களாலும் செடிகளாலும், வர்ணக் காகிதங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பந்தலில் நிறுத்தப்பட்டிருந்த ஒவ்வொரு தூணிலும் சுயமரியாதை இயக்கக் கருத்துகள் எழுதப்பட்டிருந்தன. குஞ்சிதம் அம்மையார் மாநாட்டைத் திறந்துவைத்து, ஆங்கிலத்தில் உரையாற்றினார். 'குத்தூசி' குருசாமி அதை தமிழில் மொழிபெயர்த்தார்.

தலைமை உரையாற்றிய ஆர்.கே.சண்முகம் செட்டியார், "செட்டிநாட்டு மக்களின் சமூக முன்னேற்றத்திற்கும் சீர்திருத்தத்திற்கும் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளே மிக அவசியமானவை. காங்கிரஸின் சுயராஜியம் மதத்தைக் காப்பாற்றுமானால், அந்த மதத்தைக் காப்பாற்றும் சுயராஜ்யம் நமக்கு வேண்டாம்; நாஸ்திகமாவது நல்லது" என்றார். இரண்டாம் நாள் மாநாட்டில் பேசிய பட்டுக்கோட்டை அழகிரி, எளிய மக்களிடம் சுயமரியாதை இயக்கத்திற்குக் கிடைத்துவரும் ஆதரவு, பணக்காரர்கள் மத்தியில் கிடைக்கும் எதிர்ப்பு இரண்டையும் ஒப்பிட்டு கருத்துகளைக் கூறினார்.

"புதிதாகக் கோயில்களும் சத்திரங்களும், வேதபாடசாலைகளும், மடங்களும் அமைக்கப் படக் கூடாது; இதற்காகச் செலவழிக்கப்படும் சொத்துகளைப் பொதுப் பள்ளிக்கூடங்களாகவும் கைத்தொழிற் சாலைகளாகவும், பொது மக்களுக்குப் பயன்படும் வைத்தியசாலைகளாகவும் மாற்ற வேண்டும். பிறப்பின் மேல் ஏற்படுத்தப்படும் சாதிப் பிரிவினைகளும் உயர்வு தாழ்வுகளும் முற்றிலுமாக ஒழிக்க வேண்டும்.

புரோகிதர் மற்றும் மதச் சடங்குகள் அற்ற சுயமரியாதைத் திருமணங்களையும் கலப்புத் திருமணங்களையும் ஆதரிக்க வேண்டும். பெண்களுக்குச் சொத்துரிமை ஏற்படுத்த ஒரு சட்டமியற்ற வேண்டும். குளம், கிணறு, சாலை போன்ற பொது இடங்களில் அனைத்துப் பிரிவினருக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும்" என்றும் தீர்மானங்கள் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

**...கூட்டம் திரளும்**

## பீகார் ஆகும் தமிழ்நாடு?

சட்டம்-ஒழுங்கு சந்தி சிரிக்கின்றது. முதலமைச்சரும் அமைச்சர்களும் தத்தமது சொந்த வேலைகளைப் பார்க்கச் சென்றுவிட்டனர். அரசு விடுமுறை நாட்களில், அரசாங்கமும் விடுமுறை எடுத்துக்கொண்டதை உணர்ந்துகொண்டனர், சொந்த ஊருக்குப் புறப்பட்ட சென்னை மக்கள். பண்டிகை மற்றும் தொடர் விடுமுறை காரணமாக சொந்த ஊருக்குப் புறப்பட்ட மக்கள், ஆட்சி மாற்றத்தின் வேதனையை அனுபவிக்கும் நிலை ஏற்பட்டதைச் சமூக வலைதளங்களில் குமுறல்களாகக் கொட்டியுள்ளனர்.

கடந்த வாரத்தில் மூன்று நாள்கள் தொடர் விடுமுறை என்பதால், சென்னையிலிருந்து இலட்சக்கணக்கானோர் புறப்படுவார்கள் என்பது முன்கூட்டியே தெரிந்ததே. அதற்கேற்ப, சிறப்புப் பேருந்துகளைத் திட்டமிடுவது அரசின் கடமை. கடந்த தி.மு.க. ஆட்சியில் தீபாவளி, பொங்கல் போன்ற விழாக்களின்போது பயணிகளின் எண்ணிக்கையை முன்கூட்டியே கணித்து, ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான சிறப்புப் பேருந்துகளை இயக்கி, மாற்றுப் பேருந்து நிலையங்கள், முன்பதிவு மையங்கள், போக்குவரத்து மாற்றங்கள் என ஒருங்கிணைந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆனால், தற்போதைய நிலை என்ன? கிளாம்பாக்கத்தில் போதிய பேருந்துகள் இல்லாமல், மக்கள் நீண்ட நேரம் காத்திருந்தனர். சிறப்புப் பேருந்துகளை முறைப்படுத்த எந்த அதிகாரியும் இல்லை. பயணிகள் அலைகழிக்கப்பட்டுள்ளனர். ஆம்னி பேருந்துகளில் கட்டணம், பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. ரூ.5,000 வரையில் பேருந்துக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளன. சொந்த ஊருக்குச் செல்ல பேருந்துக்காகக் காத்திருந்து தவித்த காட்சிகளும், அதிக கட்டணம் கொடுத்துச் செல்லவேண்டிய நிலையைப் பலரும் வீடியோக்களாகப் பகிர்ந்துள்ள நிலையில், சில பேருந்துகளின் மேற்கூரையில் ஆபத்தான முறையில் மக்கள் பயணிக்கும் காட்சியும் வீடியோவாக வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தமிழ்நாடா? பீகாரா? என்றும் கேள்வியை எழுப்பி இருக்கின்றனர். மக்களின் மாண்பு மற்றும் பாதுகாப்பு குறித்து, கிஞ்சித்தும் அக்கறை இல்லாதவர்களின் கையில் ஆட்சி இருந்தால் எப்படி இருக்கும் என்பதற்கு, தமிழ்நாடும் சான்றாகும் நாள் தொலைவில் இல்லை என்றே தோன்றுகிறது.

## ஃப்ளாஷ்பேக்



மு.பி.பா. அன்புச்செழியன்



### தலைவர் தலைமையில், மணவிழா வரவேற்பு!

2003-ஆம் ஆண்டு, எனது திருமண வரவேற்பு விழா நிகழ்ச்சி அன்றைக்கு, கழகத் துணைப் பொதுச் செயலாளராக இருந்த, இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமை யில் நடைபெற்றது. எனது தந்தையார், கழக இலக்கிய அணி மாநிலத் தலைவராக மற்றும் பச்சையப்பன் கல்லூரி முன்னாள் முதல்வராக இருந்த பேராசிரியர் மு.பி.பா. என்கிற மு.பி.பாலசுப்ரமணியன் அவர்கள், தலைவரை வரவேற்பு மகிழ்ந்தார். அப்போதைய ஒன்றிய அமைச்சரும் கழகப் பொருளாளருமான அண்ணன் டி.அர்.பாலு அவர்கள் முன்னிலை வகித்தார். படத்தில், வாழ்த்துரைத்த எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் ஆர்.எம்.வீரப்பன், கழக முன்னாள் அமைச்சர் சற்குணபாண்டியன் மற்றும் எவாஞ்சலிகல் சர்ச் ஆஃப் இந்தியா (ஈ.சி.ஐ) திருச்சபையின் நிறுவனர், பேராயர் எஸ்றா சற்குணம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

**– மு.பி.பா.அன்புச்செழியன்,**
**பேரின்பம் பாலர் பள்ளி நிறுவனர், தலைவர், செங்கல்பட்டு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

**132**

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




## அழிக்க முடியாத ஆவணங்கள்!

ஒன்றியத்தில் ஆட்சியில் இருந்த இந்திரா காங்கிரஸ் கட்சியால் நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்டபோது, அதைக் கண்டித்து முதன்முதலாகத் தீர்மானம் நிறைவேற்றி வெளியிட்ட பெருமை தி.மு. கழகத்தையே சேரும். எந்த அளவுக்கு அதற்கான எதிர்ப்பு இருந்ததென்றால், அன்றைய இந்திரா காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவராக இருந்த டி.கே.பரூவா "இந்திரா காந்தி தி.மு. கழகத்தைத் தடை செய்யும் கதி நேரலாம்" என்று மும்பையில் பேசிய ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டார்.

ஆட்சி கலைக்கப்பட்ட அடுத்த தினம், 25,000-க்கும் மேற்பட்ட தி.மு.கழகத்தினர் 'மிசா' சட்டத்தில் கைதுசெய்யப் பட்டனர். இன்றைய கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தலைவர் கலைஞரின் மனச்சாட்சியாக இருந்த முரசொலி மாறன், முன்னாள் அமைச்சர்கள், மாநகராட்சி மேயர்கள், நகராட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் என 500-க்கும் மேற்பட்டோர் ஓராண்டுக்காலம் சிறைக் கொடுமையை அனுபவித்தனர். 'அண்ணா நினைவிடத்திற்கு மலர் வளையம் வைக்க வர இயலாதோர்' பட்டியல் என்று தலைப்பிட்டு, 'முரசொலி'யில் மாவட்ட வாரியாக அவர்களின் பெயர்களை எல்லாம் வெளியிட்டார் தலைவர் கலைஞர். எழுத்துரிமையும் பேச்சுரிமையும் முற்றிலுமாக முடக்கப்பட்டது.

'திருப்பதிக்கும் திருத்தணிக்கும் செல்கிறோம்' என்று சொல்லிவிட்டு, தமிழ்நாடெங்கிலும் இருந்து தலைவரைக் காண தொண்டர்கள் பஸ்களையும் வேன்களையும் வாடகைக்கு எடுத்துக்கொண்டு கோபாலபுரம் வந்தனர். அவர்கள் அனைவரையும் சந்தித்துப் புகைப்படம் எடுத்துக்கொண்டார் கலைஞர். சாத்தூர் பாலகிருஷ்ணன், சிட்டி பாபு என்ற இரண்டு தியாக மறவர்களை, 'மிசா' சட்டத்தாலும் காவல் துறை ஒடுக்குமுறையாலும் தி.மு.கழகம் இழக்க நேர்ந்தது.

இப்படி நெருக்கடி நிலை பற்றிய பல்வேறு செய்திகள் அடங்கிய ஆவணங்கள் நமக்குப் படிக்கக் கிடைக்கின்றன. தமிழைப் பிழையின்றி படிக்கத் தெரியாத ஆட்சியாளர்கள், தமிழ்நாட்டில் அரங்கேற்றிக் கொண்டிருக்கும் அவலங்களுக்கு இடையே, இதை எல்லாம் படிக்கச் சொல்வது பெரும் அபத்தமாகத்தான் இருக்கும். இருந்தாலும், இப்படியொரு பட்டியலை முன் வைப்பது காலத்தின் தேவை.

சிறைக்கொடுமைகளை மிக உணர்வுபூர்வமாகப் பதிவுசெய்திருக்கும் சிட்டிபாபுவின், 'சிறை டைரி குறிப்பு'. நெருக்கடி நிலை தொடங்கியதில் இருந்து சிட்டிபாபு மறைவு வரை நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளைக் கொண்டு கலைஞர் எழுதியது, 'நெருக்கடி நெருப்பாறு'. மதுரையிலுள்ள 'மஞ்சள் பதிப்பகம்' மூலம் ராஜ்மோகன் என்பவர் வெளியிட்ட, 'மிசா கால கொடுமைகள்'. 'மிசா' காலத்தில் பத்திரிகைகள் சந்தித்த நெருக்கடிகளை மட்டும் கொண்டு 'மிஸா கொடுமை' என்ற நூலை விசிட்டர் ஆனந்த் எழுதி வெளியிட்டார்.

நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்டு, 50-ஆண்டுகள் நிறைவுற்றதையொட்டி, ஆங்கிலத்தில் ஏராளமான நூல்கள் இன்றும் வெளிவந்தவண்ணம் உள்ளன. படிக்கத் தெரிந்தவர்கள் அவற்றை எல்லாம் படித்தாவது, இன்றுள்ள ஆட்சியாளர்களின் காதுகளுக்குக் கொண்டுசேர்க்க வேண்டும்.

**...வாசிப்போம்.**

## மூலம் வு க ரு

### பட்டைத் தீட்டாத வைரம்!

1960-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், சென்னை 59-வது வட்டம், திருவள்ளுவர் மன்ற 10-வது ஆண்டு விழாவில் உரையாற்றினார், பேரறிஞர் அண்ணா. கழகத்தின் இலட்சியத்தை விளக்கிப் பேசியவர், "ஆப்பிரிக்காவில் வைரக்கற்கள் கிடந்தபோது, அதன் மதிப்பை அறியாமல் மக்கள் அவற்றைக் கூழாங்கற்களைப் போல உதைத்துத் தள்ளினர். வெள்ளையர்கள் அதன் மதிப்பை உணர்ந்து அள்ளிச் சென்றனர்' எனக் குறிப்பிட்டு, 'நம்மிடத்தில் கிடைத்திருக்கிற இலட்சியம், ஆப்பிரிக்கர்களின் காலில் பட்ட வைரத்திற்குச் சமானமாக இருக்கிறது"என்றார். கொள்கையின் மதிப்பை உணராமல் இருப்பவர்களைக் குறித்த அண்ணாவின் உவமை, இன்றும் சிந்திக்க வைக்கும்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900